Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, ஜனவரி 13, 2021

**நெஸ்லே வடமேல் மாகாணத்தில் முதன்முதல் வணிகரீதியான பசுந்தீவன நிறுவனத்தை அமைக்க உதவி, உள்நாட்டு பாற்பண்ணையாளர்களுக்கு சத்தான கால்நடை தீவனத்தையும் உயர் தர பாலுக்கான மினி குளிரூட்டிகளையும் வழங்குகிறது**

வடமேல் மாகாணத்தில் உள்ள பாற்பண்ணையாளர்களுக்கு உயர்தர கால்நடைத் தீவனங்களை தங்குதடையின்றி பெற்றுக்கொள்ளவும், உள்நாட்டு பாலின் தரம் மற்றும் விநியோகத்தை மேம்படுத்தவும் உதவுவதற்காக முதலாவது வணிகரீதியான பசுந்தீவன நிறுவனத்தை அமைக்க நெஸ்லே உதவியுள்ளது. மாதந்தோறும் 100,000 கிலோவுக்கும் மேற்பட்ட பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதற்காக அங்குள்ள பாற்பண்ணையாளரும், தொழில் முயற்சியாளருமான திரு. ஆர். எம். பத்மசிறி அவர்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை நிறுவனம் வழங்குகிறது. இலங்கையில் பாற்பண்ணையாளர்கள் பலரும் ஆண்டு முழுவதும் போதுமான பசுந்தீவனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு போராட வேண்டியுள்ளமையால், இந்த முயற்சியானது திரு. பத்மசிறிக்கு இப்பகுதியில் உள்ள மற்ற நெஸ்லே பாற்பண்ணையாளர்களுக்கு தொடர்ந்து தங்கள் பசுக்களுக்கு கட்டுபடியான செலவில், உயர்தர தீவனத்தை வழங்க உதவும். சந்தை-சார்ந்த பாலுற்பத்தி செயற்திட்டத்தால் (Market-Oriented Dairy - MOD) இந்த முயற்சிக்கு தொழில்நுட்ப ஆலோசனை உதவி கிடைத்துள்ளது.

‘‘பால் உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் பயணித்து வருகின்ற நிலையில், இது போன்ற முயற்சிகள் காலத்தின் தேவையாகும். உள்நாட்டு பால் உற்பத்தித் தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதில் நெஸ்லே தொடர்ந்து அளித்து வருகின்ற ஆதரவுக்கு நான் நன்றி கூறுகிறேன்,’’ என்று வடமேல் மாகாணத்தின் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார மாகாணப் பணிப்பாளரான வைத்தியர் பி.சி.எஸ். பெரேரா அவர்கள் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பாற்பண்ணையாளர்களுக்கு மினி குளிரூட்டிகளையும் நிறுவனம் வழங்கியது. இந்த குளிரூட்டிகள் எடை குறைந்தவை மற்றும் இலகுவில் கொண்டு செல்லக்கூடியவை. சந்தையில் மிகவும் எரிசக்தி திறன் கொண்டவை என்பதால் அதன் விளைவாக மின்சாரம் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்படுகிறது. இந்த மினி குளிரூட்டிகள் பாற்பண்ணையாளர்களுக்கு அவர்களின் பாலின் தரம் மற்றும் உற்பத்தியை மேம்படுத்தவும், தங்கள் பசுக்களில் ஒரு நாளைக்கு இரண்டு முறை, காலையிலும் மாலையிலும் பாலைக் கறக்க உதவுவதன் மூலம் வருமானத்தை மேம்படுத்தவும், மாலையில் கறக்கின்ற பாலை 4 பாகை செல்சியஸ் என்ற உகந்த வெப்பநிலையில் வைத்துப் பேணவும் உதவும். இது மறுநாள் காலையில் நெஸ்லே நிறுவனத்தால் சேகரிக்கப்படும் வரை பதம் கெட்டுப்போகாது பாலைப் பேணிப் பாதுகாக்க உதவுகிறது.

‘‘உள்நாட்டு உற்பத்தி மற்றும் வாழ்வாதாரங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதில் நிறுவனங்கள் சமூகத்துடன் எவ்வாறு ஒன்றாக இணைந்து செயற்பட முடியும் என்பதற்கு இந்த கூட்டு முயற்சி சிறந்த ஒரு உதாரணமாகும். மிகுந்த வாய்ப்புக்களைக் கொண்டுள்ள பாற்பண்ணையாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு இலாபகரமான மற்றும் பேண்தகமை கொண்ட வணிகங்களைக் கட்டியெழுப்புவதற்கு உதவுகின்ற எமது விவசாய தொழில் முயற்சியாளர்கள் (agripreneurship) நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு அங்கமாக இது அமைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டளவில் எமது 14,000 பாற்பண்ணையாளர்களுக்கும் உயர் தர கால்நடைத் தீவனத்தை கட்டுபடியாகின்ற வகையில் தங்குதடையின்றிய விநியோகத்தினைக் கொண்டிருப்பதை உறுதிசெய்வதில் உள்நாட்டில் போதுமான அளவில் விவசாய தொழில் முயற்சியாளர்களுக்கு வலுவூட்ட வேண்டும் என்ற எமது நோக்கத்தில் இது வெறும் ஆரம்பம் மாத்திரமே என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்,’’ என்று நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஃபேப்ரிஸ் காவலின் அவர்கள் குறிப்பிட்டார்.

இலங்கையில் புத்தம்புதிய தரமான பாலை அதிகூடிய அளவில் கொள்வனவு செய்யும் நிறுவனங்களில் நெஸ்லேயும் ஒன்றாகும். இது *மைலோ, நெஸ்டமோல்ற்று, நெஸ்பிறே, நெஸ்கஃபே,* மற்றும் *மில்க்மெய்ட்* ஆகிய உடனடியாக அருந்தக்கூடிய பான உற்பத்திகளைத் தயாரிக்க உள்நாட்டில் கொள்வனவு செய்கின்ற பாலைப் பயன்படுத்துகிறது. தனது பாலுற்பத்தி மேம்பாட்டுப் பணிகளின் ஒரு பகுதியாக, நெஸ்லே விவசாயிகளுக்கு பலவிதமான தொழில்நுட்ப விடயங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் குறித்து வழக்கமான பயிற்சியை வழங்கிவருகிறது. கால்நடை வளர்ப்பு மற்றும் இனப்பெருக்கம் மற்றும் கால்நடைகளின் ஆரோக்கியம் மற்றும் பாற்பண்ணை முகாமைத்துவம் ஆகியவை இதில் அடங்கும். முக்கிய உபகரணங்கள் மற்றும் மருந்துகளையும்

நிறுவனம் நன்கொடை அளித்து வருவதுடன், பாற்பண்ணைகளை மேம்படுத்த நிதி உதவிகளையும் வழங்குகிறது. மேலும், அரசாங்கத்துடன் இணைந்து இலவச நடமாடும் கால்நடை சிகிச்சை மையங்களையும் ஏற்பாடு செய்து வருகிறது.